FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

Under Section 173 BNSS

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069059

1. District : Nilgiris மாவட்டம் | PS: V & AC காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: 5 மு.த.அ. எண் | Date: 28.08.2026 நாள்

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as amended | Sections பிரிவுகள்: 7(a) & 8
(ii) Act சட்டம்: by PC (Amendment) Act, | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018. | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை: Prior to 27.08.2026 1500hrs
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.08.2026 | Time : நேரம் 12.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.08.2026 | Time : நேரம் 12.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Panchayat Union Office Udhagamandalam about 4kms West.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. Sivakumar குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Hunsur தொழில் Sanishtadar (Excise) | (g) Address : முகவரி Special District Inspection Cell office Nilgiris District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) K. Karthick Panchayat Secretary, Balacola Panchayat, Udhagamandalam
2) A. Rajaraman, Zonal Deputy BDO (Zonal-2), Panchayat Union Office
3) A. Vinodharajpandian, Zonal Deputy BDO (Zonal-1) and 4 others.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/08/2026

28-08-2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 28.08.2026. 15.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. Shanmugaradiru
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police
VEAC, The Nilgiris.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/2026/AC/Nl, u/s 7(a) & 8 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:–

இன்று 28.08.2026–ம் தேதி காலை சுமார் 12.00 மணிக்கு நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் கோ.சண்முகவடிவு ஆகிய நான், அலுவலகத்தில் இருந்தபோது, நீலகிரி மாவட்டம், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.K.சிவக்குமார் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/2026/AC/Nl, u/s 7(a) & 8 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 கீழ் 13.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அந்த புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் K.சிவக்குமார், தலைமை பொறுப்பாளர் (ஆயம்), உதவி ஆணையர் அலுவலகம், உதகமண்டலம், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி. அம்மையீர், பொருள்: திடீர் சோதனை – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – ஊராட்சி ஒன்றிய அலுவலகம், உதகமண்டலம் – நடவடிக்கை எடுக்க கோருதல் – தொடர்பாக. நான் நீலகிரி மாவட்டம், உதவி ஆணையர் அலுவலகத்தில் தலைமை பொறுப்பாளர் (ஆயம்) ஆக பணியாற்றி வருகிறேன். நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் என்னை சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக உத்தரவு எண்.A1/Pdl.30/2026, நாள்:27.08.2026–ன்படி நியமித்திருந்தார். எனக்கு உதகமண்டலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 11.08.2026–ம் தேதி தூய்மை பாரத இயக்கம் (ஊரகம் பகுதி–2)–ன்கீழ் ரூ.62,64,000/–க்கான 20 ஒப்பந்த பணிகளுக்கு ஒப்பந்தம்

நடைபெற்றுள்ளது என்றும், மேலும் உதகமண்டலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் கீழ் உள்ள 13 ஊராட்சிகளுக்கு ஊராட்சி பொது நிதியில் 5 ஒப்பந்த பணிகளுக்கான ஒப்பந்தம் 25.08.2026-ம் தேதி நஞ்சநாடு, பாலகொலா மற்றும் தூனேரி ஊராட்சிகளில் நடைபெற்றுள்ளது என்றும், மேற்படி ஒப்பந்தங்களுக்காகவும், ஏற்கனவே முடிந்த பணிகளுக்காகவும் உதகமண்டலம் ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சி மற்றும் வட்டார ஊராட்சி), ஊராட்சி செயலர்கள், பொறியாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் ஒப்பந்ததாரர்களிடம் கையூட்டு பெறுவதாக நம்பகமான ரகசிய தகவல் கிடைக்கப்பெற்றது. அதன்படி உதகமண்டலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மதியம் சுமார் 15.00 மணிமுதல் இரவு சுமார் 21.30 மணிவரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. நான் நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினருடன் மதியம் 14.50 மணிக்கு புறப்பட்டு, கேசினோ சந்திப்பிற்கும் பழைய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக சந்திப்பிற்கும் இடையில் உள்ள சாலையில் வடமேற்கு பார்த்தவாறு இருந்த உதகமண்டலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக பிரதான கேட்டின் வழியாக உள்ளே நுழைந்தபோது அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அறையின் இருக்கையில் யாரும் இல்லை. வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அறையின் இருக்கையிலும் யாரும் இல்லை. அந்த சமயத்தில் உதகமண்டலம் ஊராட்சி அலுவலக மேலாளர் திருமதி.சாந்தி அவர்கள் மதிய உணவு முடித்து அலுவலகம் வந்தார். அவரிடம் நானும், காவல் ஆய்வாளர் அவர்களும், மற்றும் காவல் குழுவினரும் அடையாள அட்டைகளை காண்பித்து அறிமுகம் செய்துகொண்டு, காவல் குழுவினரையும் அறிமுகம் செய்து வைத்து, தங்களது உடைமைகளை காண்பித்தும், உதகமண்டலம்

ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்திருக்கும் விபரம் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மேலாளர் திருமதி.சாந்தி அவர்களிடம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திரு.B.சந்திரசேகரன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) திரு.K.ஸ்ரீதரன் ஆகியோர்களைப்பற்றி கேட்க, திரு.சந்திரசேகரன் அவர்கள் காலை அலுவலகத்திற்கு வந்துவிட்டு, கள ஆய்விற்காக கூக்கல் ஊராட்சிக்கு சென்றுள்ளதாக தெரிவித்தார். திரு.ஸ்ரீதரன் அவர்களுக்கு நேற்று (26.08.2026) ஓணம் பண்டிகை என்பதால், இன்று (27.08.2026) ஒருநாள் தற்செயல் விடுப்பில் உள்ளார் என்று தெரிவித்தார். பின்னர் மேலாளர் திருமதி.சாந்தி அவர்களை சோதனை செய்ய தன்னுடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.110/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, செலவிற்காக வீட்டிலிருந்து எடுத்து வந்த பணம் என்று சொன்னதால், அவர் கூறிய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேலாளர் திருமதி.சாந்தி அவர்களிடம் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சந்திரசேகரன் அவர்களை அலுவலகத்திற்கு வரச்சொல்லி தகவல் கொடுக்க சொல்லப்பட்டது. அவர் அழைப்பை ஏற்கவில்லை என்று தெரிவித்தார். பின்னர் பொது பிரிவில் இருந்த அலுவலக பணியாளர்கள் அனைவரையும் சோதனை செய்ததில் அவர்களிடம் கைப்பற்றும் படியான பணமோ, பொருளோ இல்லை. பின்னர் பொதுபிரிவு அலுவலக அறை முழுவதும் சோதனை செய்யப்பட்டது. அந்த சமயத்தில் சுமார் 15.25 மணிக்கு பாலகொலா ஊராட்சியை சேர்ந்த செயலர் திரு.K.கார்த்திக் என்பவர் அலுவலகம் வந்தார். அவரை விசாரிக்க தான் பாலகொலா ஊராட்சியில் 05.05.2021-ம் தேதி முதல் ஊராட்சி செயலராக பணிபுரிந்து வருவதாகவும், செப்டம்பர் 2025 முதல் மேல்குந்தா ஊராட்சி செயலராக கூடுதல் பொறுப்பிலும்,

08.03.2026–ம் தேதி முதல் தொட்டபெட்டா ஊராட்சி செயலராக கூடுதல் பொருப்பில் இருப்பதாகவும் தெரிவித்தார். 27.08.2026–ம் தேதி 03.30 மணிக்கு உதவி இயக்குநர் ஊராட்சி தணிக்கை அவர்களின் மறு ஆய்வு கூட்ட காணொளி காட்சிக்கு ஊராட்சி அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தனது பேண்டின் பின்பக்க வலது பக்க பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.500/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவரிடம் வேறு எதாவது பணம் இருக்கிறதா என்று கேட்க, தனது கார் **TN 43 M 3615** மாருதி செலிரியோ வாகனத்திலிருந்து இளம்பச்சை நிற அலுவலக கவரினுள் இருந்த ரூ.3,19,500/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை குறித்து அவரிடம் கேட்க, தனது அப்பா நிலத்தை விற்ற பணம் என்று தெரிவித்தார். அதற்கான ஆவணங்கள் குறித்து கேட்க, முன்னுக்குப்பின் முறணாகவும், தவறுதலாக தெரிவித்து விட்டேன் என்றும் தெரிவித்து, அந்த பணம் ஓரக்குட்டி கிராமத்தை சேர்ந்த திரு.ஆனந்த் என்பவரிடம் சீட்டு எடுத்த பணம் என்று தெரிவித்தார். அப்போது காவல் ஆய்வாளர் திரு.கார்த்திக்கிடம் திரு.ஆனந்த் என்பரின் கைபேசி எண்ணை பெற்று, திரு.ஆனந்த் செல்போன் எண்.6385264919–ஐ காவல் ஆய்வாளர் சுமார் 16.11 மணிக்கு தொடர்புகொண்டு ஒலி பெருக்கியை ஆன் செய்து திரு.கார்த்திக் சீட்டு போட்ட விவரம் மற்றும் சீட்டு எடுத்த விவரம் பற்றி கேட்டபோது, திரு.கார்த்திக் ரூ.2,00,000/– தொகைக்கான சீட்டு போட்டிருந்ததாகவும், அதில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு சீட்டு முடிவற்று ரூ.1,00,000/–ஐ மட்டும் பெற்றுக்கொண்டு மீதி தொகை ரூ.1,00,000/–ஐ பிறகு பெற்றுக்கொள்வதாக தெரிவித்ததாக திரு.ஆனந்த் தெரிவித்தார். அவர் கூறிய விவரத்தை பற்றி திரு.கார்த்திக்கிடம் கேட்க முன்னுக்குப்பின் முறணாக தெரிவித்ததால், அந்த பணம் ரூ,3,19,500/– 25.08.2026–ம் தேதி பாலகொலா ஊராட்சியில் நடைபெற்ற

ஒப்பந்தபுள்ளியின்போது, ஒப்பந்ததாரர்களிடம் பெற்ற கமிஷன் தொகையை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலம் கொடுக்க வந்த கையூட்டு பணமாக இருக்கலாம் என அவரிடம் இருந்த ரூ.500/- மற்றும் வாகனத்திலிருந்து எடுத்து வந்து ஆஜர் செய்த பணம் ரூ.3,19,500/- விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். மேலும் அந்த சமயத்தில் அலுவலகத்திற்குள் துணை ஒப்பந்ததாரர்களான திரு.ஜெயபால், திரு.S.மணிகண்டன் மற்றும் திரு.E.சதீஷ்குமார் ஆகியோர் ஒருவருக்கு பின் ஒருவராக அலுவலகம் வந்தனர். முதலில் திரு.ஜெயபால் என்பவரை விசாரிக்க, தான் மூன்று முறை தொட்டபெட்டா ஊராட்சி வார்டு எண்.11-ல் கவுன்சிலராக தேர்வு பெற்றதாகவும், தனது மனைவி திருமதி.ராஜலட்சுமி பெயரில் உதகமண்டலம் ஊராட்சியில் ஒப்பந்த பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். இன்று 27.08.2026-ம் தேதி திரு.கிருஷ்ணராஜ் என்பவருக்கு மின் இணைப்பு பெற வேண்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் வந்ததாகவும், தனக்கு ரூ.6,00,000/-க்கான பில் தொகை வரவேண்டியுள்ளது என்றும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் கைப்பற்றும் படியான பணமோ பொருளோ இல்லை. மேலும் அவரிடம் அவரது வாகனம் குறித்து கேட்க, தனது வாகனம் மஹிந்திரா பொலிரோ **TN 43 M 2727** அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். அவரிடம் வாகனத்தில் எதாவது பணம் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் தனது வாகனத்திலிருந்து ரூ.500/- ரூபாய் தாள்கள் கொண்ட ஒரு கட்டை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் 99 எண்ணிக்கையில் ரூ.49,500/- இருந்தது. அந்த பணத்தைப்பற்றி கேட்க, கூலி கொடுக்க வைத்திருப்பதாகவும், முன்னுக்குப்பின் முறணாகவும் விளக்கம் அளித்தார்.

அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால், அந்த பணம் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும், பொறியாளர்களுக்கும் கொடுக்க வைத்திருந்த கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் பெயரில் பணம் ரூ.49,500/- விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். திரு.**S**.மணிகண்டன் என்பவரை விசாரிக்க, தான் உதகமண்டலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒப்பந்த பணிகளை மேற்கொண்டு வரும் கிண்ணக்கொரை திரு.**R**.ராஜன் என்ற ஒப்பந்ததாரரின் பணிகளை துணை ஒப்பந்ததாரர் என்ற முறையில் எடுத்து செய்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் தனது மனைவி நித்யா என்பவர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தற்காலிக பணியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். 27.08.2026-ம் தேதி மாலை தனது மனைவியை வீட்டிற்கு அழைத்து செல்ல வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தனது பேண்டின் முன்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.6,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, செலவுக்கு வைத்திருந்ததாக கூறினார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால், அந்த பணம் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். மேலும் அவரிடம் வேறு பணம் ஏதாவது உள்ளதா என்று கேட்க, தனது பொலிரோ வாகனம **TN 43 F 5176**-லிருந்து பணம் ரூ.2,61,500/-ஐ எடுத்து வந்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, திரு.ராஜன் ஒப்பந்ததாரரிடம் கொடுக்க வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். அதற்கான ஆவணங்களை அவரிடம் கேட்க, முறைப்படியான ஆவணங்களை சமர்ப்பிக்காததால், அந்த பணம் ரூ.2,61,500/- விசாரணைக்காக காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். பின்னர் திரு.**E**.சதீஷ்குமார் என்பவரை விசாரிக்க, தனது தந்தை ஈஸ்வரன் பதிவு

ஒப்பந்ததாரராக ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருந்து, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தனது பேண்டின் முன்பக்க இடதுபுற பாக்கெட்டிலிருந்து ரூ.500/- தாள்கள் கொண்ட ஒரு கட்டை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் ரூ.29,500/- இருந்தது. அந்த பணத்தை பற்றி கேட்க, தனது தந்தை முள்ளிகூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொண்ட நான்கு ஒப்பந்த பணிகளுக்கான வேலைகளின் அளவீட்டு புத்தகங்கள் 1) 148/2023-24, 2) 103/2024-25, 3) 104/2024-25, 4) 108/2024-25 மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்களை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வேலைகள் முடிக்கப்பட்ட புகைப்படம் இணைத்து கொடுத்துவிட்டு வரும்படி முள்ளிகூர் ஊராட்சி செயலர் திரு.கார்த்திக் தெரிவித்ததாக கூறினார். பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, சரியான விளக்கம் அளிக்காமலும், முன்னுக்குப்பின் முறணாகவும் பதில் அளித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்த வகையில் இல்லாததால், அந்த பணம் ரூ.29,500/- விசாரணைக்காக காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். பின்னர் கிராம ஊராட்சி பிரிவில் இருந்த அலுவலர்கள் அனைவரையும் சோதனை செய்ததில் அவர்களிடம் கைப்பற்றும் படியான பணமோ பொருளோ இல்லை. பின்னர் சேர்மேன் அறையின் இரண்டாவது கேபினில் போடப்பட்டிருந்த மேஜையில் நேர் எதிரே அமர்ந்திருந்த முதலாம் நபரை விசாரிக்க தன்னுடைய பெயர் திரு.**A**.ரகுவரன் என்றும், தான் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக (மண்டலம்-3 உல்லத்தி, தொட்டபெட்டா மற்றும் நஞ்சநாடு) பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவர் தனது சட்டையின் மேல்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.32/- ஐ எடுத்து ஆஜர் செய்து, செலவிற்காக வைத்திருந்த பணம் என்று சொன்னதால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இரண்டாம்

நபரை விசாரிக்க தன்னுடைய பெயர் திரு.R.வரதராஜபாண்டியன் என்றும், தான் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக (மண்டலம்–1 இத்தலார் மற்றும் முள்ளிகூர்) பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவர் தனது பேண்டின் பின்பக்க பாக்கெட்டிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.260/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க, வீட்டிலிருந்து சாப்பாடு செலவிற்கு எடுத்து வந்த பணம் என்று தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அந்த அறை முழுவதும் சோதனை செய்யப்பட்டது. அந்த அறையில் இருந்த மேஜையின் இடது பக்க கீழ்புற டிராயரில் காக்கி நிற கவரினுள் 200 ரூபாய் தாள்கள் மடித்த நிலையில் இருந்தது. அந்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் ரூ.11,400/– இருந்தது. அந்த பணத்தைப்பற்றி கேட்க, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ரகுவரன் மற்றும் திரு.வரதராஜபாண்டியன் ஆகியோர் முன்னுக்குப்பின் முறணாக விளக்கம் அளித்ததால், அந்த பணம் ரூ.11,400/– விசாரணைக்காக காவல் ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். பின்னர் பொறியியல் பிரிவில் முதல் கேபினுக்கு அருகே நின்றிருந்தவரை விசாரிக்க தன்னுடைய பெயர் குப்புசாமி என்றும், தான் திரு.ஜெகன் ரஞ்சித் என்ற ஒப்பந்ததாரர் எடுத்த பணிகளை துணை ஒப்பந்ததாரராக எடுத்து செய்து வருகிறேன் என்று தெரிவித்தார். தன்னுடைய ஒப்பந்ததாரர் பதிவை புதுப்பிக்க வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தன்னுடைய பேண்டின் முன்பக்க இடதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.7,500/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க, சரியான முகாந்திரம் கூறாததால், அந்த பணம் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கு கொடுக்க வந்த கையூட்டு பணமாக இருக்கலாம் என்று விசாரணைக்காக செயல்முறையில் கைப்பற்றப்பட்டது.

திடீர் சோதனையின்போது திரு.கார்த்திக், திரு.மணிகண்டன், திரு.ஜெயபால், திரு.சதீஷ்குமார், திரு.ரகுவரன், திரு.வரதராஜபாண்டியன் மற்றும் திரு.குப்புசாமி ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.6,85,900/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், வாக்குமூலங்கள் மற்றும் திடீர் சோதனை செயல்முறை நடவடிக்கை ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். 27.08.2026-ம் தேதி திடீர் சோதனையின் போது உதகமண்டலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியில் இருந்த சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் K.சிவக்குமார் உதகமண்டலம், 28.08.2026. Submitted: I have received a complaint from Tr.K.Sivakumar, Husur Sarishtadar (Excise), In-charge Special District Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam, the Nilgiris on 28.08.2026 at 13.00hrs and registered a case in Nilgiris Vigilance and Anti-Corruption Cr.No.5/2026 u/s 7(a) & 8 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 Sd (xxxx), G.Shanmugavadivu, 28.08.2026 Inspector of Police, Vigilance and Anti-Corruption, the Nilgiris.

Original FIR along with original written complaint of Tr.K.Sivakumar, Husur Sarishtadar (Excise), In-charge Special District Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam, the Nilgiris is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Principal District and Sessions Court, Udhagamandalam and copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

28-08-2026

(G.SHANMUGAVADIVU)
inspector OF Police,
Vigilance and Anti-Corruption,
The Nilgiris.